# புலிகள் தெரிவுக் குழு முன் யோசனைகளை முன்வைக்கும் சூழ்நிலை உருவாகவில்லை - திலகர் பேட்டி

(பாரிஸ்)
இலங்கையில் தொடர்ந்தும் இனவாதம் தலைவிரித்தாடும் நிலையில் தமிழ்மக்களுக்கு சலுகைகள் எதனையும் கொடுக்க அரசு ஒருபோதும் நினைக்கவில்லை என விடுதலைப் (4-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5.00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 13 இதழ் 45
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 26 — 03 — 1992

## புலிகள் விவகாரம் இலங்கை—இந்தியா பேச்சு

(புதுடில்லி)
விடுதலைப்புலிகள் விவகாரம் குறித்து விரைவில் இலங்கை அரசுடன் இந்தியா பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
புலிகளை இந்தியாவில் தடை (4ம் பக்கம் பார்க்க)

## டிக்ஷிற் திலகரட்ண புதுடில்லியில் பேச்சு

(புதுடில்லி)
கச்சதீவு பிரச்னை மற்றும் இந்திய மீனவர் பிரச்னை குறித்து இலங்கை வெளியுறவு செயலர் திரு. பேர்ணட்திலகரத்னவை இந்திய வெளியுறவு செயலர் திரு. ஜே. என். (4-ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

# 18 படையினர் உயிரிழந்தனர்

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)
**மட்டக்களப்பு செங்கலடியில் நேற்றுக்காலை ரோந்து சென்ற ஸ்ரீலங்கா படையணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 18 படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 13 படையினர் காயமடைந்தனர். 16 நவீன ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

செங்கலடி இராணுவமுகாமிலிருந்து முதிரையடி இராணுவ முகாமுக்கு ரோந்து சென்ற படையணி மீது விடுதலைப் புலிகள் மின்னல்வேக அதிரடித் தாக்குதல் தொடுத்தனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் 18 படையினர் கொல்லப்பட்டும, 13 படையினர் படுகாயமடைந்துமுள்ளனர்.

மேற்படி படையினருக்கு உதவுமுகமாக கரடியனாறு இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கணக்கான படையினர் பவள் கவசவாகனங்கள் மற்றும் ஹெலிகொப்டரின் உதவியுடன் சென்றபோது விடுதலைப்புலிகளின் மற்றோர் அணி கடும் தாக்குதலை மேற்கொண்டதில் நிலைகுலைந்த படையினர் இழப்புகளுடன் (4-ம் பக்கம் பார்க்க)

## 50 தமிழ் இளைஞர் இராணுவத்தால் கைது

(மூதூர்)
மூதூர் பகுதியில் தமிழர் வதியும் கிராமங்கள் மீது அண்மையில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட படையினர் 50 இற்கு மேற்பட்ட தமிழரை கைது செய்தும் 20 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞரை தாக்கிபடுகாயப்படுத்தியும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பூர், கிளிவெட்டி, சீதனவெளி, வெருகல் ஆற்றங்கரை, கட்டைபறிச்சான், ஆகிய தமிழ் கிராமங்களே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு படையினரின் சுற்றிவளைப்பிற்கு உட்பட்ட பகுதிகளாகும்.

30 வயதிற்கு மேற்பட்ட தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

(க)

## சிப்பாய்கள் துப்பாக்கிச்சூடு சிறுவன் பலி; 6 பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு செங்கலடியில் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பாடசாலைச் சிறுவன்ஒருவன் பலியானதாகவும், பாடசாலை ஆசிரியர் (4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவின் நடவடிக்கை திடீரென ஒத்திவைப்பு?

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வுகுறித்து ஆராய அரசினால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றதெரிவுக் குழுவின் சகல நடவடிக்கைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.
தமிழ் - சிங்களப் புத்தாண்டை ஒட்டியே ஏப்ரல் 21ம் திகதிவரை தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் ஒத்தி [4-ம் பக்கம் பார்க்க]

## மணலாறு போரில் 40 ராணுவம் பலி

(கொழும்பு)
மணலாறு போரில் 40 படையினர் கொல்லப்பட்டு150க்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துமுள்ளதாக அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இம்மோதலில் இரு கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டதாகவும் டாங்கி எதிர்ப் (4-ம் பக்கம் பார்க்க)

## பாதயாத்திரையை குழப்ப அரசு முயற்சி

(கொழும்பு)
தற்போது மாத்தறைப் பகுதியில் நடைபெற்றுவரும் பாதயாத்திரையை குழப்பும் நடவடிக்கையாக அரசு பல்வேறு தீயசக்திகளை பயன்படுத்துகிறது என்று பாதயாத்திரையின் அமைப்பாளரும் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பியுமான மகிந்தராஜபக்ஸ அரசு மீது (4-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த குழுவின் முடிவிற்கு அரசு பொறுத்திருக்கும்

(கொழும்பு)
வடபகுதிக்கு விரைவில் விஜயம்செய்யவுள்ள பௌத்த பிக்குகளின் முடிவிற்கு அரசு பொறுத்திருக்குமென எதிர்பார்க்கப்படுவதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.
ஏழு பேரடங்கிய இக்குழு வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளிவந்ததையடுத்து இந்த முயற்சிக்கு பெருமளவு ஆதரவு கிடைத்துள்ளதாகவும், எதிர்க் (4ம் பக்கம் பார்க்க)

## இனப் பிரச்னை தீர்வுக்கு ஸ்கன்டினேவிய நாடுகள் முயற்சி

(லண்டன்)
இலங்கை இனப்பிரச்னைக்கு சமாதான தீர்வு காணும் நோக்கில் 'ஸ்கன்டினேவிய' நாடுகள் தொடர்ந்தும் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.
புலிகளையும் - அரசையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர இவை தற்போது சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளனவாம். (4ம் பக்கம் பார்க்க)

## கத்தோலிக்க ஆயர் குழு யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் சிரேஷ்ட கத்தோலிக்க ஆயர்களில் ஒருவரான சிலாபமறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. மார்க்கஸ் பெர்ணண்டோ தலைமையில் கண்டி மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. வியன்னி பெர்ணண்டோ, வணபிதா அல்பிரட் அலெக்சாண்டர், மற்றும் அருட்சகோதரி ஒரு [4-ம் பக்கம் பார்க்க]

## புற்பாய் தொழிலகம்

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பில் புற்பாய் கைத்தொழில் முயற்சியினை மேற்கொள்வதற்கான ஆரம்ப வேலைகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

தற்போது பாய் நெய்வதற்கான சம்புப் புல் களஞ்சியப் படுத்தும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு:

மாதகல் சென். தோமஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீசியன்ஸ் மோதும் இப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும்.

## முத்தமிழ்விழா நிதிக்காக மாபெரும் கலைநிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் சென்ற வருடத்தைப்போல் இவ்வருடமும் பத்து நாட்கள் முத்தமிழ் விழா பல பாகங்களில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட இருக்கின்றது.

முத்தமிழ் விழாவில் தமிழீழ மக்கள் அனைவரினதும் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு கலை நிகழ்ச்சிகளை நடாத்தி முத்தமிழ் விழாவிற்காக நிதி சேர்ப்பதென விழாக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

அதன்படி முதலாவது கட்ட நிகழ்ச்சியாக 28ம் திகதி சனிக்கிழமை பி. ப. 6-30 மணிக்கு கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியிலும், 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண பாடசாலை அரங்கிலும் மாபெரும் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்படவுள்ளன.

'இந்த மண் எங்களின் சொந்தமண்' புகழ் சாந்தன் குழுவினர் வழங்கும் 'போர்க்கால ராகங்கள்' இசை நிகழ்ச்சியும், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் தயாரிப்பில் உருவான திரு. பொன். கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகமும் இடம்பெறவிருக்கின்றன.

ரூபா 50, 25. 10 பெறுமதியான அன்பளிப்புச் சீட்டுகளை பெற்று, முத்தமிழ் விழா வெற்றிபெற ஒத்துழைக்கும் வண்ணம் முத்தமிழ் விழாப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

## நூலறிமுகமும், ஆய்வரங்கும்

'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்'

சாளரம் வெளியீடு:

மேற்படி நிகழ்வு

29-03 92 ஞாயிறு மாலை 3 மணிக்கு

நெல்லியடி மத்திய கல்லூரியில்

இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சாளரம்' வெளியீட்டாளர்கள்.

இந்நூல் 1920களில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் அமைப்பில் விபுலானந்தரின் பங்கு பற்றி எழுதப்பெற்றுள்ளது.

(சி-6090)

## யாழ். மாநகராட்சி மன்றம்
## ஆதனவரி அறிவித்தல்

1992ஆம் ஆண்டு 1-ம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 31-3-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விபரப்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படுமெனவும், 2-ம், 3-ம், 4-ம் கந்தாயங்களுக்கான வரியை அக்கந்தாயங்களின் முதல் மாதத்துக்குள் 5% வரிக்கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள்<br>குறியிருப்புக் காணிகள் | 15% |
| இவையல்லாத காணிகளுக்கு | 20% |

காசோலைகளை, காசுக்கட்டளைகளை, அஞ்சல் கட்டளைகளை ''யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவுசெய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
23-3-1992.

(ஏ-2001)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 03 | 06 | 1936



உதிர்வு: 19 | 03 | 1990

### அமரர் முத்துத்தம்பி சாம்பசிவம்
(இமையாணன்)

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

[சி 6092)

## ஞாபகார்த்த விழா

[யாழ்ப்பாணம்]

டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 237-வது பிறந்தநாள் ஞாபகார்த்த விழா இம்மாதம் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி 35-ம் இலக்க இல்ல மண்டபத்தில் வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும் 29-ம் திகதி ஞாயிற்றுகிழமை மாலை 4-30 மணிக்கு நிலையத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு ஏழாலை பிரதேச அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்களும், வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவரும் சமுகந்தருவார்கள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த

### வித்துவான் வி. சண்முகம்
[சைவப்புலவர்]

[இளைப்பாறிய ஆசிரியர் யா/ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி புத்தூர்]

பிறப்பு: 13. 02. 1915

இறப்பு: 26. 02. 1992

ஈழத்தில் தமிழும் சைவமும் வளர பெரும் தொண்டாற்றிய சமூக சேவகர், எம்மை வாழவைத்த தெய்வமாகிய தீபம் அணைந்துவிட்டது.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டி கிரிகைகள் நாளை 27-03-92 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

[சி-6093]

## அன்னை பூபதியின் 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழ் ஈழ விடுதலைக்காக தன்னுயிரை தியாகம் செய்த அன்னையே! உமது உயிர் தியாகத்தை தமிழ் இனம் இருக்கும் வரை என்றும் நினைவுகூறும். உங்கள் ஆதமா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வட பிராந்திய
வர்த்தக ஊழியர் சங்கம்
தலைமைச் செயலகம்,
237, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 6091)

## இராசிபலன்

26/03/1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 13)

அட்டமி ந.இ. 11-30 வரை, மூலம் பி. ப. 1-19 வரை, சித்தயோகம், இராகுகாலம் பகல் 1-44 முதல் 3-14 வரை, சுபநேரம் காலை 7-44 முதல் 9-14 வரை.

மேடம்: கவனக்குறைவு, வாக்குகலகம், காலில்வலி.

இடபம்: மானக்குறைவு, இடையூறுகள், ஏமாற்றம்.

மிதுனம்: இல்லச்சிறப்பு, அதிகாரம், நன்மதிப்பு.

கடகம்: சென்றவிடத்தில் சிறப்பு, பணவரவு, வெற்றி.

சிங்கம்: சத்துருகவலை. காயமேற்படல், தொழில்பாதிப்பு.

கன்னி: தனித்தநிலை, அதிகபிரயாசம், சீவனகஷ்டம்.

துலாம்: புத்திரர்பெருமை, நண்பர் உதவி, தொழில் லாபம்.

விருச்சிகம்: மூர்க்கத்தனம் போசனக்குறைவு, அலைச்சல்.

தனுசு: இனசன மகிழ்ச்சி, புத்திதடுமாற்றம், வெறுப்பு

மகரம்: கெட்டசகவாசம், கவனக்குறைவு, காரியதடை.

கும்பம்: சுபகாரியசெலவு, பயணங்களால் நன்மை. புகழ்.

மீனம்: மனச்சந்தோஷம், தனவரவு, வாக்குவசீகரம்.

-ஜோஸ்யர்

யாழ்ப்பாணம்.

# மனித உரிமைகளை இந்தியா மோசமாக மீறுகிறது

## மன்னிப்புச் சபை கண்டனம்

(லண்டன்)

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, இந்தியாவில் மீறப்படும் மனித உரிமைகள் பற்றி கண்டனமும் கவலையும் தெரிவித்துள்ளது.

இந்தியப் பொலிசாரினால் கைதுசெய்யப்படும் அநேகர், காவலில் இருக்கும்போது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது.

அண்மையில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு விடுத்திருந்த அறிக்கையில், 1985லிருந்து கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் சித்திரவதைக்குள்ளாகி 485 பேர் இறந்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ளது. ஆனால் இவர்களில் அநேகர் சிறுகுற்றம் புரிந்தவர்களும் அடங்கியிருந்தனராம்.

இந்தியாவிலுள்ள பல மாநிலங்களிலுமிருந்து மனித உரிமைகள் அமைப்புக்கு முறைப்பாடுகள் வந்துள்ளன.

இதுவரை 25 பொலிசார் மாத்திரமே மனித உரிமை மீறல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கொலை குற்றச்சாட்டுப் பேரில் ஒருவரும் குற்றஞ்சாட்டப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பத்திரிகைகளில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை ஆதாரமாகக் கொண்டே மனித உரிமைகள் அமைப்பு தனது அறிக்கைகளை தயாரிக்கிறது என்ற குற்றச்சாட்டையும், இந்த அமைப்பின் தலைமையக தலைவர் மறுத்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்திலுள்ள இந்தியாவுக்கான உயர் ஸ்தானிகர் இக்குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளதோடு தீவிரவாதிகளால் கொடுக்கப்படும் பிழையான தகவல்களே இவை எனவும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பற்றி கவனிக்க இந்திய அரசும் மனித உரிமைகள் ஸ்தாபனம் ஒன்றைஅமைக்கவுள்ளது எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கே)

# ருக்மன்கோஷ்டி மீண்டும் ஐ. தே. க. வில் சேர முடிவு

(கொழும்பு)

ஐ. தே. க.விலிருந்துபிரிந்து சென்று புதிய கட்சியை ஸ்தாபித்தவரான திரு.ருக்மன்சேனநாயக்காவும் அவரது குழுவினரும், அக்கட்சியை கலைத்ததோடு, மீண்டும் ஐ. தே. கவில் இணைய முன்வந்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் மறைவின் பின் சில கருத்து மோதல்களால், ஐ. தே. க.விலிருந்து பிரிந்து சென்று திரு. ருக்மன் சேனநாயக்கா புதிய கட்சியை ஆரம்பித்திருந்தார்.

இவர் திரு. டட்லியின் பெருமகனவார். (கே)

# வாயு வெடி விபத்தில் அறுபது பேர் பலி

(டக்காறியா)

மேற்கு ஆபிரிக்க நாடான சௌகலில் இடம்பெற்ற வாயு வெடி விபத்தில் சுமார் 60பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்தனர்.

சௌகலின் தலைநகரில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட 'அமோனியா' வாயு வெடிவிபத்திலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மேலும் பலர் தொழிற்சாலையின் வாயு அறைக்குள் சிக்குண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இனவாதத்தைவளர்ப்பவர்கள் உயர்மட்ட அரசியல்வாதிகளே

## அமைச்சர் தொண்டா கூறுகிறார்

[கொழும்பு]

''50 வருடமாக இந்த நாட்டின் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணாத இன்றையமுன்னணி அரசியல்வாதிகள் தொண்டமானும் ஒரு புலி என இன்று சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்கின்றார்கள்.''

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் இறக்குவானையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கடந்த வாரம் கூறினார்.

இன்று வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களாகஇருந்தாலும்சரி சிங்களவர்களாக இருந்தாலும் சரி அவர்களனைவரும் இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற எண்ணத்தை இன்றைய அரசியல்வாதிகள் சிலர் மறந்து, தொடர்ந்தும் துவேஷத்தை வளர்த்து அரசியல் நடத்தவே விரும்புகிறார்கள்.

இவைகளுக்கு முடிவு காணவே நல்லதொரு திட்டத்தை முன்வைத்தேன், ஆனால் தொண்டமானும் ஒரு புலி என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறு இனவாதத்தை வளர்ப்பவர்கள் சாதாரண சிங்கள மக்களல்ல, உயர்மட்ட அரசியல்வாதிகளே என்று அமைச்சர் தொண்டமான் மேலும் கூறினார். (வி)

# தமிழ் வர்த்தகர் பொலிஸாரால் கைது

[கொழும்பு]

நற்சீரகத்தில் கலப்படம் செய்து கொழும்பு கோட்டைப் பகுதியில் விற்கமுயன்ற தமிழ் வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினன்கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை செய்து வந்த மற்றும்பல மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

4ம் குறுக்குத் தெருவில் இவரது ஹோட்டல் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டஇக் ஹோட்டலை உடனடியாக மூடிவிடும்படி விசேட உத்தரவு பிறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மூதூரில் களமாடி 9-6·91 அன்று விழுப்புண்பட்டு, 23-3-92 அன்று வீரச் சாவைத் தழுவிக்கொண்ட லெப். நளன் (செல்வசேகரம் கணேசலிங்கம் மூதூர்). மணலாற்றுப் போரில் களமாடி வீரச் சாவைத் தழுவிக்கொண்ட (வீரவேங்கை தர்சினி வனிதா கந்தசாமி-வாழைச்சேனை) வீர வேங்கை கப்டன் மணாளன் (சண்முகநாதன் சிறிதர்-சுழிபுரம்) ஆகியோரின் புகழுடல்கள், நேற்று முன்தினம் நவாலி பரமதேவா இடம் பெயர்ந்தோர் முகாமில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

இவ்வஞ்சலிக் கூட்டம் வலிகாமம் மேற்கு அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இளையவன் தலைமையில் இடம்பெற்றது. இதில் செல்வி வெண்ணிலா, திரு. செல்வநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## பயிற்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை, ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சை (1991) எடுக்கும் காரைநகர் மாணவர்களின் நன்மை கருதி, ஓர் பயிற்சிப் பரீட்சை, 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். நாவலர் ம. வி.யிலும் வட்டு. திருஞானசம்பந்தாவிலும் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் நடாத்தவுள்ளனர்.

# நாடுதழுவிய வேலைநிறுத்தம்; எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

(காலி)

''எமது இந்த பாதயாத்திரை ஏப்ரல் 2ம் திகதி முடிவடையும். இதன் பின்பு, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த நாட்டில்பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தப் போகின்றோம்''

இவ்வாறு கதிர்காமத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கும் பாதயாத்திரை கோஷ்டியில் கலந்து கொண்ட பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா காலியில் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

எமது கதிர்காம பாதயாத்திரை வெற்றிகரமாக நடைபெறுகின்றது. பொதுமக்களின் ஆதரவு பெருகிவருகின்றது. இந்த பாதயாத்திரை முடிவடைந்ததும் விரைவில் மலைநாட்டிலும் ஒரு பாதயாத்திரை நடாத்துவோம் என்று அவர் மேலும் கூறினார். (வி)

## உப தபால் அதிபர் சேவையை

# ஓய்வூதியமுள்ள சேவையாக மாற்ற தபால்அதிபர் முயற்சி

[சித்தன்கேணி]

உப தபாலதிபர் சேவையை ஓய்வூதியமுடைய சேவையாக மாற்றுவதற்கு தபால் மாஅதிபர் நாடு பூராவுமுள்ள உப அஞ்சல் அதிபர்களிடமிருந்து தனித்தனியே விருப்பத்தைத் தெரிவிக்குமாறு சுற்று நிருபம் மூலம் கோரியிருக்கிறார்,

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உப தபால் அதிபர்களுக்கும் யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் தபால் மாஅதிபரின் சுற்று நிருபத்துடன் தமிழ் மொழி பெயர்ப்பையும் இணைத்து அனுப்பி வைத்துள்ளார்.

இச் சுற்று நிருபத்தில் ஓய்வூதியமுடைய சேவையாக மாற்றுவதனால் ஏற்படும் நன்மைகள், இழப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[137]

## விசர்நாய் கடியினால்

# இறப்பவர்கள் தொகை அதிகரிப்பு !

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் விசர் நாய்க்கடியால் இறப்போர் தொகை அதிகரித்துவருகிறது. இதனால் இப்பகுதி மக்கள் பலத்த அச்சமும் பீதியும் அடைந்துள்ளனர்.

இப்பகுதியில் விசர்நாய்க் கடிக்கு ஏற்றும் தடுப்பூசி மருந்துகளுக்கும் நாய்களுக்கு ஏற்றப்படும் நோய்த்தடுப்பூசிகளுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசர்நாயினால் கடிபட்ட ஏழுபிள்ளைகளின் தந்தையான தும்பளையைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை செல்வராசா (வயது-65) நாய்க்கடிக்கான தடுப்பூசி தட்டுப்பாடு காரணமாக ஊசி ஏற்றாததினால் கடந்த திங்கட்கிழமை மரணமாகியுள்ளார்.

சுமார் இரண்டுவாரங்களுக்கு முன்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த குடும்பஸ்தரொருவரும் விசர்நாய்க்கடியால் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மரணமானார். (52)

## வல்வை

# இந்திராணி வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்டது

[வடமராட்சி]

வல்வை இந்திராணி அரசினர்வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

1947-ம் ஆண்டு முகாந்திரம் அப்புக்குட்டியாபிள்ளையினால் அவரது சொந்தச் செலவில் ஆண், பெண் வார்ட்டுகள் பிரசவ அறையென மூன்று கட்டிடங்களுடன் ஆரம்பித்துவைக்கப்பட்டு அப்போதைய அரசினால் திறந்து வைக்கப்பட்டு அரசினர் வைத்தியசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் நிர்வாகக் கட்டடம் ஒன்றும் அரசாங்கத்தால் கட்டப்பட்டது.

1967-ம் ஆண்டுதிரு. எஸ். விஷ்ணுசுந்தரத்தினால் நவீன வசதிகளுடன் பிரசவக் கட்டடமும், குழந்தைகள் சிகிச்சை நிலைய இருமாடிக் கட்டிடமும் நாற்பத்திநாலு கட்டில் வசதிகளுடன் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இம்மாதம் 5-ம் திகதி முதல் யாழ். மாவட்ட வைத்தியசாலையாக இவ்வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (51)

### கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்[

''கிறீஸ்தவனாயிருத்தல் என்ற பொருளில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கத்தோலிக்க, மெதடிஸ்த குருமார் பங்குபற்றும் கருத்தரங்கு யாழ். பரி. யோவான் ஆலய மண்டபத்தில் இம்மாதம் 28-ம் திகதி சனிக்கிழமை காலை இறைமக்கள் பயிற்சி நிலையத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கிறது. [மா]

## தவக்கால நற்சிந்தனை

''உங்கள் இதங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்''

கடவுளின் வாக்குக்குச் செவிசாய்க்கவேண்டும், அப்போதுதான் நாம் அவர் மக்களாக இருக்கமுடியும். அவரின் சொல்லைக் கேட்காமலும், அதன்படி நடவாமலும் நாம் இருப்போமானால், நாம் அழிந்து போகும் இனமாவோம்.

- மோ. தார்சிசியஸ்

கிரிக்கெட்

# உலகக் கிண்ணத்தை முதல் தடவையாக பாகிஸ்தான் சுவீகரித்துக் கொண்டது

(மெல்போன்)

5வது உலகக் கிரிக்கெட் கிண்ணத்தைப் பாகிஸ்தான் கைப்பற்றியது.

பாகிஸ்தானுக்கும், இங்கிலாந்துக்கும் இடையில் நேற்று மெல்போனில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

'பூவா-தலையா' நாணயச் சுண்டலில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பு எடுத்தாடியது.

பாகிஸ்தான் முதல் 9 ஓவர்களில் 24ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுகளை இழந்து சங்கடமான நிலையில் இருந்தது.

ரமேஷ்ராஜா 8 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். இதன் பின்பு துடுப்பு எடுத்தாடிய பாகிஸ்தான் கப்டன் இம்ரூன்கானும், யாவிட்மியன்டாட்டும் மிக நிதானமாகத் ஓட்டங்களின் எண்ணிக்கையை 41 ஓவர்களில் 163 ஆக உயர்த்தியபோது, யாவிட் மியன்டாட் 58 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

இதன்பின்பு கப்டன் இம்ருன்கானுடன், இன்ஸ்சமான் உல்ஹக்கசோடி சேர்ந்து ஆடியபோது இம்ருன்கான் 44வது ஓவரில் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது பாகிஸ்தான் 4விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 197 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதைத்தொடர்ந்துஇன்ஸ்சமான் உல்ஹக்கும் வாஸிம் அக்கிரமும் மிகவேகமாக ஓட்டங்களை எடுத்தனர். 50வது ஓவரில் கடைசி இரு பந்துகள் இருக்கும்போது இன்ஸ்சமான் உல்ஹக் 42 ஓட்டங்களுடனும், கடைசிப் பந்தில் வாஸிம் அக்கிரம் 33 ஓட்டங்களுடன் ரண் அவுட்டாக ஆட்டமிழந்தனர். அப்போது பாகிஸ்தான் 50 ஓவர்களில் 6விக்கெட்டுகள் நஸ்டத்துக்கு 249 ஓட்டங்களை மொத்தம் பெற்றது.

இதன்பின்பு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஆரம்பத்தில் தனது சிறப்பு துடுப்பாட்டக்காரர்களை இழந்த நிலையிலேயே தோல்வியைத் தழுவவேண்டிய நிலை ஏற்பட்டது. கப்டன்கிறகாம் கூச்-29, இயன்பொத்தம் – 00, கிறகாம் கிக் – 7, ஸ்ரேவேட் – 07 ஓட்டங்களைப்பெற்றனர். அப்போது இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 21 ஓவர்களில் 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதைத் தொடர்ந்து ஆடிய பயபிறதரும் அலன் லாம்பும் சோடி சேர்ந்து ஓட்டங்களின் எண்ணிக்கையை 35 ஓவர்களில் 141 ஆக உயர்த்திய போது வாஸிம் அக்கிரமின் அபாரப்பந்து வீச்சில் அலன் லாம்ப் 31 ஓட்டங்களுடனும் அடுத்து வந்த லூயிஸ் ஓட்டமெதுவும் பெறுமலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தார்கள்.

இதைத்தொடர்ந்து பயபிறதர் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து 45 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 185 ஓட்டங்களையும் 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 227 ஓட்டங்களையும் பெற்றது. பிறிங்கிள் 32 ஓட்டங்களைப் பெற்றார்.

மேற்படி போட்டியில் சிறந்த வீரராக பாகிஸ்தான் வீரர் வாஸிம் அக்கிரம் தெரிவு செய்யப்பட்டார்.

இதுவரை நடைபெற்ற 5 உலகக் கிண்ண போட்டிகளில் 3 போட்டியில் இங்கிலாந்து இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றும் சாம்பியனாகாததும் குறிப்பிடத்தக்கது.

# 400 ரெலோவினர் இலங்கை வருவர்

[கொழும்பு)

தமிழகத்தில் தங்கியுள்ள தமிழ் குழுக்களில் சுமார் 400 ரெலோ இயக்கத்தினர் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளனர்.

இது குறித்து தமிழக முதல்வருடன் இந்தியாவிற்கான இலங்கை தூதர் டாக்டர் நெவில் கனகரட்ண பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இலங்கை வரும் ரெலோவினர் யாழ். மாவட்ட தீவுப் பகுதிகள், திருமலை, மட்டக்களப்பு பகுதியில் படையினருடன் இணைந்து செயற்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தமிழக எம். பி.க்கள் ராஜிஞமா செய்யவேண்டும்

(சென்னை)

"மே மாதம் 21ம் திகதிக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை மத்திய அரசு விசாரணைக்கு நிறுத்தவேண்டும், விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டும், இல்லாவிட்டால் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட மே மாதம் 22ம் திகதி ஒரு ஆண்டு பூர்த்தியின் போது தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் எம்.பி.க்கள் அனைவரும் ராஜிஞமாச் செய்ய வேண்டும்."

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி கோரியுள்ளார்.

எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் நாம் போராட்டம் ஒன்றை ஆரம்பித்து ஆகஸ்ட் 15ம் திகதி வரை நடாத்துவோம். அதன் பின்பு பிரதமர் திரு. நரசிம்மராவை ராஜிஞமாச் செய்யும்படி கோரி எமது போராட்டத்தை மேலும் தீவிரமடையச் செய்வோமென்று டாக்டர் சுப்பிரமணியசுவாமி மேலும் கூறினர். (வி)

## மகாபொல விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அனைத்துப்பீட முதலாம் வருட மாணவர்களுக்குமான மகாபொல சம்பந்தமான கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

### டிக்ஸிற்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்ஸிற் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதே வேளை, இந்தியா சென்றுள்ள கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இப்பிரச்னைகள் குறித்தும் வேறு விடயங்கள் குறித்தும் இந்திய உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். (சி)

### புலிகள் விவகாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தல், பிரபாகரனை நாடு கடத்துதல் தொடர்பாகவும் இலங்கை அரசும் புலிகளும் பேச்சுக்கள் எதிலும் ஈடுபடும் சாத்தியத்தை தடுப்பதாகவுமே இது அமையுமெனவும் புதுடில்லி வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

எனினும் பிரபாகரனை நாடு கடத்துதல், அரசு-புலிகள் பேச்சை தடுத்தல்போன்ற விடயங்களில் இந்தியா பெரும் ஏமாற்றத்தை எதிர்நோக்க வேண்டி வருமென பெயர் குறிப்பிடவிரும்பாத இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சி)

### கத்தோலிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் அடங்கிய குழுவொன்று கொழும்பில் இருந்து நேற்று காலை யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளது.

இக்குழுவினர்யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் தங்கியிருப்பார்கள். இக்குழுவினர் விடுதலைப்புலிகளின தலைவர்கள் உட்பட பல்வேறு தரப்பினரையும் சந்திப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

### இனப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் இருதரப்புப் பேச்சுக்களையும் தடுப்பதற்காக மிகவிரைவில் இந்தியாவில் புலிகளை தடை செய்யுமாறு மத்திய அரசுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாம்.

எனினும் இவ்வாறான ஒரு தடை, புலிகளுக்கு விதிக்கப்பட்டாலும் அது மேற்படி ஸ்கன்டிநேவிய நாடுகளினதோ இலங்கை அரசினது சமாதான முயற்சிகளையோ பாதிக்காதுஎனவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## க. பொ. த. பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) விசேட பரீட்சை 1991க்கானது நடத்துவதற்கான உரிய ஏற்பாடுகள் யாவும் முடிவடைந்துவிட்டதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை பற்றி யாழ். மாவட்டத்தில் உள்ள பரீட்சை நடத்தும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இம்மாதம் 31ம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சை முடிவு

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சை 1991க்கான பெறுபேறுகள் இந்த மாதக்கடைசியில் அல்லது அடுத்த வார முற்பகுதியில் வெளிவரலாம் என கொழும்பில் இருந்து வந்த கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் தெரிவித்தார். (சு)

### பாதயாத்திரையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாதயாத்திரையைக் குழப்பும் நோக்கத்துடன், குடிபோதையில் பலரை ஆளும் கட்சியினர் பாதயாத்திரைக்குள் ஊடுருவல் செய்திருந்தவேளையில் பாதயாத்திரை அமைப்பாளர்களால் அவர்கள் இனம் காணப்பட்டு உடனடியாக அப்புறப் படுத்தப்பட்டார்கள் என்று மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (மா)

### பௌத்த குழுவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சியினரால் எதிர்க்க முடியாதநிலை தோன்றியுள்ளதாகவும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது.

மேற்படி குழு புலிகளுடன் சந்தித்து வெளியிடும் கருத்துக்காக அரசுபொறுத்திருக்குமெனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (சி)

### மட்டக்களப்பில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முகாம் திரும்பினர்.

இம்மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு: ஏ.கே. இலகு இயந்திரத் துப்பாக்கி 01, ரி. 56 ரக துப்பாக்கி -13, ரி. 81 ரக துப்பாக்கி -02, ஏ. கே இலகு இயந்திரத் துப்பாக்கிக்குரிய ரவைக்கூடு -01, ரவைகள்-585, ரி- 56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் 41, ரி.81 ரகதுப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள்-07, நடுத்தர ரவைகள் 2,000, தொலைத்தொடர்பு சாதனம் 01 ஆகிய ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இம்மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 2ம் லெப் சேரன் (குணரத்தினம் தெய்வேந்திரம் களுவாஞ்சிக்குடி) வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த போராளிக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்,

இத்தாக்குதலில் 08 படையினர் உயிரிழந்ததாக அரசுகூறியுள்ளது. (க)

### சிப்பாய்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் உட்பட 6 பேர் படுகாயங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரோந்து சென்ற படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே மேற்படி அனர்த்தம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, புலிகளின் தாக்குதலில் காயமடைந்த படையினர் பலர் ஹெலிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

### மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புப் பீரங்கி ஒன்றும் அதற்குரிய ஐந்து குண்டுகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் அரசு கூறியுள்ளது. (சி)

### தெரிவுக்குழுவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளபோதிலும் இதற்கு வேறு காரணங்கள் இருக்கலாமென பீ. பி ஸி. தெரிவித்தது. (சி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசை பொறுத்தவரையிலோ அல்லது சிங்கள தேசத்தை பொறுத்தவரையிலோ எப்போதும் அங்கு இனவாதம் தலைவிரித்தாடுவதைத்தான் காணக்கூடியதாயுள்ளது. அப்படியானதொரு சூழ்நிலையில் எந்வொரு சலுகைகளையும் தமிழருக்கு கொடுக்கும் நோக்கம் அரசுக்கு இருந்ததாக தெரியவில்லை. இந்த அடிப்படையில் தான் தொண்டமானையும், நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும் புலிகள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்தபோது அந்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற தெரிவுக்குழு அரசினுல் இலங்கை யாப்பினுள் உருவாக்கப்பட்டதாக இருந்த போதிலும் இலங்கை அரசு எந்தத் தீர்வுத் திட்டத்தையும் தெரிவுக்குழுவின் மூலமோ அல்லது வேறு அமைப்புகளின் மூலமோ அந்த தீர்வுத்திட்டங்களை மலினப்படுத்த விரும்பியிருந்த போதும் அந்த தெரிவுக்குழு என்ன சொல்கின்றது, என்ன திட்டத்தை தயாரிக்கிறது, என்ன திட்டத்தை வகுத்துள்ளது என்பதை அறியும் பொருட்டும், தமிழரின் அபிலாஷைகளை தெரிவிக்கும் பொருட்டும்தமிழரின்இன்னல்களை அறியும்பொருட்டும்தெரிவுக்குழுவின்பிரதிநிதிகளை புலிகள் அழைத்திருந்தும் இந்த முயற்சி சமாதானத்திற்கு வழிகோலுமென புலிகள் முயற்சி எடுத்தபோதும் இதனை அரசு நிராகரித்ததை ஒரு துர்ரதிஷ்ட வசமானதென்றே கருதுகிறோம்.

தெரிவுக்குழுமுன் புலிகளின் திட்டம் சமர்ப்பிக்கப்படுவது தொடர்பாக கூறுகையில்: ஒரு திட்டத்தைப் பற்றியோ, ஒரு மாற்றுத்திட்டத்தைப்பற்றியோ புலிகள் சிந்திக்குமளவுக்கு அரசு நடந்துகொள்ளவில்லை.

அந்த ஒடுக்குமுறையாளன் இதுவரைக்கும் சமாதானமாக வாழ்வதற்குத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. இதே வேளை தெரிவுக் குழுவும் ஒரு திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இன்னமும் இராணுவ ரீதியான இன அழிப்பையே செய்துவருகிறது சமாதானத் தீர்வுக்கான அறிகுறி எதுவுமே இல்லாத வகையில் அரசு நடந்துகொள்ளும் போது, புலிகள் சமாதானத் திட்டத்தை முன்வைக்குமளவிற்குச் சூழ்நிலை உருவாகவில்லை.

உலகத்தில் நடைபெறும் மாற்றங்களைப் பொறுத்தவரை, இரண்டு மக்களும், இரண்டு தேசிய இனங்களும் இறைமையுள்ள நாடுகளாக ஒரு தீவின் கீழ் வாழுகின்ற சூழ்நிலை இருப்பதையும் காணுகின்றோம். அப்படியான எண்ண மாற்றங்கள், அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் ஏற்பட்டு, அப்படியான ஒரு சூழ்நிலைக்கு இட்டுச் செல்லவேண்டும். அப்படியான மாற்றங்களின் அடிப்படையில் தான் புலிகள் அரசுடனே அல்லது சிங்கள தேசத்துடனே பேசுவதற்கும், அந்த அடிப்படையில் ஒரு கட்டுமானங்களை உள்ளடக்கிய தீர்வுகள் பற்றி முடிவு எடுப்பதற்கும், அதனைப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வாகக் காண்தற்கும் வழிவகுக்கும். (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under License Number N/10336/81.